செ.வெ.எண் - 70 நாள்-23.10.2017

பத்திரிக்கைச் செய்தி

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்களில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் தங்களது பணிக்காலத்தில் அலுவலக நடைமுறைகளை முறையாக கடைப்பிடித்து கோப்புகளை கையாள்வதற்கு எதுவாக இருக்கும் என்ற அடிப்படையில் 23.10.2017 முதல் 27.10.2017 முடிய ஐந்து நாட்கள் நடைபெறவுள்ள புத்தாக்கப் பயிற்சி இன்று (23.10.2017) திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் துவக்கி வைத்து பயிற்சி பெறும் அலுவலர்களுக்கு பயிற்சி தொடர்பான அறிவுரைகள் வழங்கினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகள் பயிற்சிஇயக்குநரும் / மாவட்ட ஆய்வுக்குழு அலுவலருமான திருமதி க.தனலட்சுமி என்பவரால் மேற்கொள்ளப்பட்டது. மேலும் இந்நிகழ்ச்சியில் பயிற்சியாளர் திரு எஸ்.முத்துக்கிருஷ்ணன் மற்றும் துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு எஸ்.தங்கராஜ் ஆகியோர் உடனிருந்தனர். இப்பயிற்சியானது ஓய்வு பெற்ற துணை ஆட்சியர்கள் திரு. எஸ். முத்துக்கிருஷ்ணன் மற்றும் திரு. எஸ். பெருமாள் ஆகியோர்களால் நடத்தப்படுகிறது.

மாவட்ட ஆய்வுக் குழு அலுவலர்,
திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும்
கன்னியாகுமரி மாவட்டங்கள்
(இருப்பு) –திருநெல்வேலி.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி